**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044307

1. District : மாவட்டம் கரூர் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 03/AC/2023 Date: நாள் 28.07.2023

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED Sections பிரிவுகள்: 7 (a)
(iii) Act சட்டம்: IN 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 27.07.23 Date to : நாள் வரை 13.35 மணிக்கு பிறகு
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 14.45 மணிக்குள்.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.07.23 Time நேரம் : 06.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.07.23 Time நேரம் : 06.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 10.கி.மீ வடகிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வெண்ணைமலை சேரன் பள்ளி பின்புறம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. சரவணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பழனிச்சாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1978 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கேபிள் டிவி ஆப்ரேட்டர் (g) Address : முகவரி 361-2, LVB நகர், மதுரை பைபாஸ் - ரோடு, LNS அஞ்சல். கரூர் - 639002.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ரமேஷ், சர்வேயர், மண்மங்கலம். கரூர்-மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவுபட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved —
களவுபட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 28/7/23

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

P. [signature] 28/07/2023
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.07.23, ம. 09.30 HRS.

Name : பெயர் P. தங்கமணி
Rank : நிலை .................... No. எண் ....................
காவல் ஆய்வாளர்
உ.த.த. பிரிவு
நகர்.

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.03/AC/2023 u/s 7(a) of The PC Act, 1988 as amended by The PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் P.தங்கமணி ஆகிய நான் 28.07.2023 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது P.சரவணன், த/பெ.பழனிச்சாமி, 361-2, LVB நகர், பை-பாஸ் ரோடு, LNS அஞ்சல், கரூர் - 639002 என்பவர் நிலையம் ஆஜராகி ஒரு எழுத்துமூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்:- P.சரவணன், த/பெ.பழனிச்சாமி, 361-2, LVB நகர், பை-பாஸ் ரோடு, LNS அஞ்சல், கரூர் - 639002. பெறுநர்- காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்சம் ஊழல் மற்றும் கண்காணிப்புத்துறை, கரூர் மாவட்டம்.

நான் கரூர் டவுன் சணபிரட்டி கிராமத்தில் உள்ள தொழிற்பேட்டையில் சொந்தமாக கேபிள் டிவி ஆப்ரேட்டர் தொழில் செய்து வருகிறேன். எனது அம்மா திருமதி.புஷ்பராணி எனது பராமரிப்பில் இருந்து வருகிறார். எனது அம்மா பெயரில் கடந்த 25.10.1993 அன்று கரூர் மாவட்டம், கரூர் வட்டம், காதப்பாறை கிராமம் சர்வே எண்.79-க்கு உட்பட்ட இடத்தில் முத்து நகரில் மனைகளாக பிரிக்கப்பட்டதில் 1345 1/2 சதுரடி அளவுள்ள மனை எண்.7-ஐ சுத்தக் கிரயம் பெற்று அதில் என் அம்மா வீடுகட்டி வாடகைக்கு விட்டுள்ளார். தற்சமயம் காதப்பாறை கிராமம் மண்மங்கலம் வட்டத்தில் உள்ளது எனது அம்மாவின் பெயர் மேற்படி நிலத்தின் கூட்டு பட்டாவில் 15.05.2022-ம் தேதி சேர்க்கப்பட்டது. அதன் பிறகு என் அம்மாவிற்கு வயதாகிவிட்டதால், இந்த மனைக்கு அவர் பெயரில் தனி பட்டா வேண்டி அதற்குறிய கட்டணமாக ரூ.400/-ஐ 08.06.2022-அன்று செலுத்தி அதன் ரசீது, மனையின் கிரய பத்திரம், வில்லங்க சான்று மற்றும் கூட்டு பட்டா நகல் ஆகியவற்றுடன் அன்றே இ-சேவை மையத்தில் ஆன் லைன் மூலமாக விண்ணப்பித்தேன். இவ்வாறு விண்ணப்பித்திற்காக அரசுக்கு ரூபாய் 60 செலுத்தி ஒப்புகை சீட்டு பெற்றேன். ஆனால் அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்க என்னை தொடர்பு கொண்ட போது தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், மனை வரைபடம் இல்லை என்றும் காரத்தை சொல்லி விண்ணப்பத்தை 11.03.2023 அன்று தள்ளுபடி செய்து விட்டார்கள். இதனால் நான் மீண்டும் 16.03.2023 அன்று ஏற்கனவே ரூ.400/- செலுத்தியதற்கான ரசீது, மனையின் கிரய பத்திரம், வில்லங்க சான்று, கூட்டு பட்டா நகல் மற்றும் மனை வரைபடம் ஆகியவற்றுடன் மீண்டும் ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்தேன். இந்த விண்ணப்பித்திற்காக அரசுக்கு 60 ரூபாய் செலுத்தி ஒப்புகை சீட்டும் பெற்றேன். இந்நிலையில் 24.07.2023 அன்று காலை சுமார் 10.05 மணிக்கு எனது செல்போன் எண்.9943527188-க்கு செல்போன் எண்.9500648362-ல் இருந்து ஒரு அழைப்பு வந்தது. நான் எடுத்து பேசிய போது அவர் மண்மங்கலம் சர்வேயர்

ரமேஷ் பேசுவதாக அறிமுகம் செய்து கொண்டு நான் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தது சம்மந்தமாக கேட்டு தெரிந்து கொண்டு மனை நிலம் சம்மந்தபட்ட ஆவணங்களை தயார் செய்து கொண்டு என்னை அவரது கைபேசி எண்ணுக்கு அழைக்கும்படி சொன்னார். ஆவணங்கள் ஏற்கனவே ரெடியாக உள்ளது என்றும் அன்று எனக்கு முக்கியமான வேலை இருந்ததால் இரண்டு ஒரு நாளில் வருவதாக சொன்னேன். அதன் பிறகு நான் 26.07.2023 அன்று காலை சுமார் 11.10 மணிக்கு மேற்படி எனது செல்போன் எண்ணிலிருந்து அவரது செல்போனுக்கு தொடர்பு கொண்டபோது அவர் என்னை காதப்பாறை விஏஓ அலுவலகம் அருகே வந்து கூப்பிட சொன்னார். அதன் பேரில் நான் அங்கு சென்று அவரை கூப்பிட்டபோது அவர் எனது மனை நிலம் உள்ள இடத்திற்கு வரும்படி சொன்னார். நான் அங்கு சென்று மனை எண்-7-ஐ அடையாளம் காட்டினேன். பின்னர் எனது உதவியுடன் இடத்தை அளந்த பிறகு என்னிடம் இரண்டு படிவத்தில் என் அம்மாவுக்காக கையொப்பம் வாங்கி கொண்டார். பிறகு என்னிடம் இருந்த நில ஆவணங்களை வாங்கி படித்து பார்த்துவிட்டு 1988 ஆம் ஆண்டிற்கான மூலபத்திரத்தையும் மற்றும் 1990 முதல் 2023 தற்போது வரை ஈசி ஆகியவை தேவைப்படுவதாகவும் அவற்றை ஒரு ஒன்சைடு வெள்ளை பேப்பரில் குறித்துக்கொடுத்து தான் கேட்ட ஆவணங்களை எடுத்து கொண்டு தன்னை கூப்பிடும்படி சொன்னார். அதன் பேரில் நான் 27.07.2023 மதியம் மூலபத்திரம், ஈசி தயார் செய்து சர்வேயர் ரமேஷ் அவர்களின் செல்போனுக்கு பகல் சுமார் 01.35 மணியளவில் பேசினேன். அவர் பஞ்சமாதேவியிலிருந்து வந்து கொண்டிருப்பதாகவும், என்னை வெண்ணமலை சேரன் பள்ளி முன்பாக காத்திருக்குமாறு கூறினார். அதன்பேரில் நான் அங்கு போவதற்குள் அவர் மீண்டும் என்னை அவரது செல்போனிலிருந்து மீண்டும் கூப்பிட்டு தான் காத்திருப்பதாகவும் உடனே வரும்படியும் சொன்னார். நான் அங்கு சென்ற போது சர்வேயர் ரமேஷ் ஒரு பியட் காரில் காத்திருந்தார். நான் அவரிடம் சென்று மூலபத்திரம் மற்றும் ஈசியை கொடுத்ததும் அவர் வாங்கி பார்த்து விட்டு மூலபத்திரம் பதிவு செய்யப்படாமல் இருப்பதாகவும், தனிப்பட்டா வழங்குவதில் சிரமம் உள்ளது என்றும் சொன்னார். நான் அவரிடம் இதே லே அவுட்டில் ஏற்கனவே தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனால் எனது தாயார் பெயரில் தனிப்பட்டா வழங்கும்படி கேட்டேன். அதற்கு அவர் தனக்கு நிறைய ஆபிஸ் செலவு உள்ளது என்றும், மேலதிகாரிகளையும் கவனிக்க வேண்டும் என்றும் அதனால் 25000 ரூபாய் கொடுத்தால் ஒரு வாரத்திற்குள் வேலையை முடிச்சு கொடுப்பதாக பணம் கேட்டார். நான் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அப்போது அவர் பத்தாயிரம் குறைத்து கொண்டு ரூ.15000/- கொடுத்தால் தனிப்பட்டா வழங்க ஏற்பாடு செய்வதாகவும் இல்லை என்றால் எனது மனு ரிஜக்ட் ஆயிடும் இப்படியே அலைந்து கொண்டேதான் இருக்க வேண்டும் என்றும் பணத்தை ரெடி பண்ணிவிட்டு தன்னை இதே செல்போனிற்கு கூப்பிடு என்று சொன்னார். தொடர்ந்து அவரிடம் இவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமாங்க சார்

என்று கேட்டதற்கு ஒரு ரெண்டாயிரம் குறைச்சுட்டு 13 ஆயிரத்தை ரெடி பண்ணிட்டு நாளைக்கு கூப்பிடுங்க என்று சொன்னார். நான் அவரிடம் சரிங்க சார் என்று சொல்லி விட்டு வந்துட்டேன். எனக்கு என் தாயார் பெயரில் தனிப்பட்டா வாங்குவதற்கு ரூ.13,000/- லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.13,000/- லஞ்சம் கேட்ட மண்மங்கலம் சர்வேயர் ரமேஷ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சர்வேயர் ரமேஷ் அவர்கள் எழுதி கொடுத்த துண்டு சீட்டையும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/- XXXXXX (P.சரவணன்) 28/07/2023.

Sir, Received the complaint on 28.07.2023 at about 06.30 hrs,. a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.03/AC/2023 u/s 7(a) of the PC Act, 1988 as amended in 2018 at 07.30 hrs on 28.07.2023. Sd/-(xxxxxxxx) 28.07.2023. P.Thangamani, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.P.Saravanan, S/o.Tr.Palanisamy, 361-2, LVB Nagar, Madurai Bye Pass road, LNS Post, Karur-639002 is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

P. [signature] 28/07/2023

**(P.Thangamani)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.